## 18. தலைப்பு 18 – பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம்

---

### 18.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 18.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 18.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) இல் உள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 18.4 முதல் 18.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

01 செலவின விடயத்திற்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் நிதியேற்பாடு பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 76,328 ஆக இருந்தது. அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 15 சதவீத அளவாகக் காணப்பட்டது.

## 18.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 18.4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 18.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்படுவதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 18.5 தீர்க்கப்படாத பொறுப்புகள்

அலுவலகத்தால் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைவான பொறுப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 107,531 ஆகக் காணப்பட்டது. இப் பொறுப்புகளுக்கு மேவதிகமாக ரூபா 1,030,862 தொகையான பொறுப்புகள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 18.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| | XXI ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகள் | 90,000 | தாபன விதிக்கோவையின் பிரகாரம், சீருடைக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக அலுவலகத்தின் பதவிநிலை மற்றும் பதவிநிலையற்ற உத்தியோகத்தர்கள் 15 பேருக்கு சீருடைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| | (i) 2013 ஏப்ரல் 22 ஆம் திகதிய 05/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02(ஆ) ஆம் பிரிவு | 36,000 | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரித்துடைய சீருடைக் கொடுப்பனவிற்கு மேலாக சீருடைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(1) ஆம் பந்தி | - | 4 உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் எவ்வித பதிவேட்டிலும் கையொப்பமிட்டிருக்கவில்லை. |
| | (iii) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் | - | கூட்டம் இடம்பெறும் நாளில் பி.ப 6.30 இன் பின்னர் கடமையாற்றுவதற்காக ஒரு நாளுக்கு செலுத்தப்படும் ரூபா 750 தொகையான |

| | | |
|---|---|---|
| | 2(iv) ஆம் பந்தி | கொடுப்பனவு, வருகைப் பதிவேட்டின் மூலம் அல்லது கைவிரலடையாள இயந்திரத்தின் மூலம் அல்லது வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தப்படாது நான்கு உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப் பட்டிருந்தது. |
| (iv) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி - | நிறுவகத்தில் உள்ள பதவியணி தொடர்பாகக் கருத்திற்கொள்ளாது கைவிரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 18.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் நடைபெறும் நாட்களின் போது சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு செலுத்தப்படும் நாளொன்றிற்கான ரூபா 750 தொகையான படிக்கொடுப்பனவு உத்தியோகபூர்வ வாகனம் உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கும் செலுத்தப்பட்டிருந்தது.

## 18.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1953 இன் 9 ஆம் இலக்க பாராளுமன்ற பதவியணி அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்கு முரணாக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு மேலதிகமாக 4 சந்தர்ப்பங்களின் போது 10 மேலதிகச் சம்பள ஏற்றங்கள் உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்டிருந்தது.

## 18.9 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மேலதிக எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 02 | 02 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 09 | 08 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 15 | 11 | 04 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 16 | 01 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 43 | 38 | 06 | 01 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் அமைய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.